தினமலர்
நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
வர்த்தகம்

**<u>குமரி மாவட்டத்தில் மழை நீடிப்பு</u>**

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக தொடர்ச்சியாக மழை நீடித்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பலத்த மழை பெய்தது. பகலிலும் அடிக்கடி சாரல்மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் பெருஞ்சாணியில் அதிக பட்சமாக 61.6 மி.மீ. மழை பதிவானது. பொதுவாக மலையோர பகுதிகளில் மழை நீடிப்பதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று காலை 19.45 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 57.50 அடியாகவும் இருந்தது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 9.60 அடியாக இருந்தது.

**<u>காய்கறி கழிவுகளிலிருந்து மண்புழு உரம் விற்பனை:நகராட்சி கூட்டத்தில் முடிவு</u>**

பெரியகுளம்:பெரியகுளம் பகுதிகளில் காய்கறி மற்றும் ஓட்டல் கழிவுகளிலிருந்து, மண்புழு உரம் தயாரித்து,விற்பனை செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.பெரியகுளம் நகராட்சி கூட்டம் தலைவர் ராஜா தலைமையில் நடந்தது. பொறியாளர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் கவுன்சிலர்கள், தலைவருக்கு இடையே நடந்த விவாதம்:பாண்டிச்செல்வி: இந்திராபுரித்தெருவில், மழை பெய்தால், தெருவின் நடுவில் சாக்கடை கழிவுநீர் செல்கிறது. பெண்கள் கழிப்பிட வசதி வேண்டும்.

தலைவர்: சாக்கடை கழிநீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். மூன்றாந்தல் மற்றும் இந்திராபுரித்தெரு மக்கள் பயன்படுத்தும் கழிப்பிடங்கள், புதுப்பிக்கப்படும். 1 வது வார்டு முதல் 30 வார்டு வரை, ஓட்டல் மற்றும்

மண்டபங்களிலிருந்து கொட்டப்படும் கழிவுகள் மற்றும் மார்க்கெட் காய்கறி கழிவுகளை, உரக்கிடங்கில் மண்புழு உரம் தயாரிக்கும் பணி நடக்கிறது. விரைவில் விற்பனை செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>சிவகங்கை விவசாயிகள் ஆர்வம்: விரும்பும்"ஜோதி' ரக நெல் குறைந்த செலவு, தண்ணீரில், அதிக மகசூல் நம்பிக்கை</u>**

சிவகங்கை:வேளாண்மை துறை வழங்கும், விதை நெல் ரகங்களை விட கூடுதல் மகசூல், நல்ல விலை கொடுக்கும் "ஜோதி' ரக நெல்லை நடவு செய்யவே, சிவகங்கை மாவட்ட விவசாயிகள் அதிகளவில் விரும்புவதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மாவட்டத்தில், பரவலாக அனைத்து தாலுகாவிலும் மழை பெய்தாலும் அதிகபட்சமாக காரைக்குடி, திருப்புத்தூரில் அதிகளவில் மழை பதிவாகியுள்ளது. இந்த மழையை நம்பி, பெரும்பாலானவர்கள் நேரடி விதைப்பாக நெல் விளைச்சலை மேற்கொள்ள, விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதற்காக, வேளாண்மை துறை சார்பில், கோ. ஆர்.,49 ரக விதை நெல்லை அறிமுகம் செய்துள்ளது. இந்த நெல்லை விதைப்பதின் மூலம், அதிக மகசூல் கிடைக்கும் என, விவசாயிகளுக்கு அறிவித்து வருகின்றனர். "ஜோதி'யே விருப்பம்: மாவட்ட அளவில், 80 ஆயிரம் எக்டேர் விவசாயிகள், நெல்லை மட்டுமே நடவு செய்து வருகின்றனர். இவை, கிணறு, கண்மாய் மற்றும் ஆற்றுப்பாசனத்துடன், நேரடி நெல் விதைப்பு மூலமும் நெல்லை நடவு செய்து வருகின்றனர். தற்போது, பெய்த மழையை வைத்து, நேரடி விதைப்பில் நெல் நடவு செய்யும் பணியில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, வேளாண்மை துறை பல வகை நெல் ரகங்களை நடவு செய்ய, வலியுறுத்துகின்றனர். ஆனால், விவசாயிகள் மனதில், "ஜோதி' ரக விதை நெல் தான், அதிக மகசூலை தரும் என்ற நம்பிக்கையை பெற்றுள்ளது. இதனால், ஜோதி ரக நெல்லை நேரடி விதைப்பு மூலம், நடவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கருத்து: இது குறித்து, மாராத்தூர் விவசாயி நடராஜன் கூறியதாவது, வேளாண்மை துறை பரிந்துரைக்கும் விதை நெல்லை நடவு செய்து, பராமரித்து அறுவடை எடுப்பதற்குள் விவசாயிகள் போராட வேண்டியுள்ளது. அதே நேரம், "ஜோதி' விதை நெல்லை நடவு செய்தால்,

அதிக தண்ணீர் தேவைப்படாது. பராமரிப்பு செலவு மிக குறைவு. பூச்சி தாக்குதல் அதிகம் இருக்காது. நெல் கதிர் சாயாமல் அப்படியே நிற்பதால், நெல் சேதம் குறையும். கேரளாவில், இந்த நெல்லிற்கு அதிக வரவேற்பு இருக்கிறது. இதனால், கேரளா மாநில அரிசி வியாபாரிகள், இந்த நெல்லை கூடுதல் விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். இதன் காரணமாக, விவசாயிகள் அதிகளவில் "ஜோதி' ரக நெல்லை நடவு செய்யவே விரும்புகின்றனர், என்றார்.விருப்பம்: மாவட்ட நிர்வாகம், விவசாயிகள் விரும்பும் விதை நெல் ரகங்களை வழங்கி, அதிக மகசூல் பெற்று, விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என, விவசாயிகள் விரும்புகின்றனர்.

## கேழ்வரகு அறுவடை தீவிரம்:மானாமதுரை விவசாயிகள் மகிழ்ச்சி

மானாமதுரை:மானாமதுரை வட்டாரத்தில் கோடை விவசாயமாக கேழ்வரகு நடவு செய்யப்பட்டுள்ளது.மானாமதுரையில் வைகையாற்றை ஒட்டியுள்ள கட்டிக்குளம்,இடைக்காட்டூர்,முத்தனேந்தல், ராஜகம்பீரம்,வன்னிக்குடி உள்ளிட்ட கிராமங்களில் இரண்டு போக விவசாயம் நடைபெறும். கடந்த நான்கு வருடங்களாக மழையில்லாததால் மோட்டார் வைத்துள்ள விவசாயிகளும் ஒரு போக விவசாயம் மட்டுமே செய்துள்ளனர். தற்போது கோடை விவசாயமாக கேழ்வரகு பயிரிட்டுள்ளனர். குறைந்த செலவு,பராமரிப்பு குறைவு, நோய் தாக்குதலும் குறைவு என்பதால் கேழ்வரகு பயிரிட்டுள்ளனர். 3 மாத பயிரான கேழ்வரகிற்கு ஏக்கருக்கு 10ஆயிரம் வரை செலவழித்துள்ளனர்.கேழ்வரகு நன்கு விளைச்சல் கண்டு அறுவடை செய்யப்படுகிறது. கேழ்வரகு அறுவடை செய்ய இயந்திரம் பயன்படுத்த முடியாது என்பதால் விவசாயிகள் கூலி தொழிலாளர்களை வைத்து அறுவடை செய்கின்றனர். வன்னிக்குடி கிராமத்தில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கேழ்வரகு அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை சம்பளம் மற்றும் கேழ்வரகும் வழங்கப்படுகிறது என்பதால் பெரும்பாலான தொழிலாளர்கள் அறுவடை பணிகளில் ஈடுபட்டுள்ளனர். கூலி தொழிலாளி ரஞ்சனி: நாள் ஒன்றுக்கு குறைந்த சம்பளம் தான். கேழ்வரகு வேறு கொடுப்பதால் வேலைக்கு வந்துள்ளோம். விவசாய வேலைகளே கிடைக்கவில்லை.இதனையும் விட்டால் வேறு வழியில்லை

என்பதால் பணிக்கு வந்துள்ளோம் என்றார்.ஏக்கருக்கு 30 முதல் 60 மூடை வரை கேழ்வரகு விளையும் என்பதால் வன்னிக்குடி,கரிசல்குளம் உள்ளிட்ட பகுதிகளில் கேழ்வரகு பயிரிட்டுள்ளனர்.பச்சைப்பசேல் என்று கேழ்வரகு விளைந்து அறுவடை பணிகள் நடந்து வருகின்றன

## கோமாரி நோய் தடுப்பூசி விவசாயிகளுக்கு அழைப்பு

தாராபுரம்: தாராபுரம் பகுதியில், கால்நடை வளர்ப்போர், ஆறு மாதங்களுக்கு, ஒரு முறை, கோமாரி நோய் தாக்காமல் இருக்க, தடுப்பூசி போடவேண்டுமென, இணை இயக்குனர் அறிவுறுத்தினார். தாராபுரத்தில், கால்நடைத்துறை பராமரிப்புத்துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. ஆர்.டி.ஓ., திவாகர் தலைமை வகித்தார். இணை இயக்குனர் சந்திரசேகரன், தாசில்தார் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சண்முகம் வரவேற்றார். தாராபுரம், காங்கேயம் ஆகிய தாலுகாவில், ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகிறது. ஆண்டுக்கு, இரு முறை கோமாரி நோய் தடுப்பூசிகள் போடவேண்டும். கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி, தாராபுரம் தாலுகாவில், அவர்களுடைய கிராமங்களுக்கே, தனித்தனிக்குழுவாக சென்று, செப்டம்பர் ஒன்று முதல், 15ம் தேதி வரை சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. முகாம் குறித்து, நோட்டீஸ் அச்சடித்து, பஞ்சாயத்து தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், பள்ளி மாணவ, மாணவியர் ஆகியோர் மூலம், வினியோகிக்க வேண்டும். ஆவின் நிறுவன ஊழியர்களை உதவிக்கு அழைத்துக்கொள்ள வேண்டும். வரமறுக்கும் ஊழியர்களின் பெயர்களை, கலெக்டரிடம் எழுத்திக்கொடுங்கள். அவர்கள் மீது, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென, இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

## வெற்றிலை விலை வீழ்ச்சி: கவலையில் விவசாயிகள்

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டத்தில் வெற்றிலையின் விலை வீழ்ச்சியடைந்து உள்ளதால், வெற்றிலை பயிரிடப்பட்ட விவசாயிகள் கவலையில் உள்ளனர். கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம், தவுட்டுப்பாளையம், என்.புகழூர், நொய்யல் அருகே புங்கோடை, சேமங்கி, முத்தனூர், கோம்புபாளையம், திருக்காடுதுறை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்

வெள்ளக்கொடி, கற்பூரி வெற்றிலை ரகங்களை ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வெற்றிலைகளை வேலாயுதம்பாளையம் பகுதிகளில் செயல்பட்டு வரும் தனியார் வெற்றிலை மண்டிகளுக்கும், விவசாயிகள் அசோசியேசன் வெற்றிலை மண்டிக்கும் அனுப்பிவைக்கின்றனர். இப்பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மற்றும் ரயில் மூலம் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரம் இளங்கால் வெள்ளக்கொடி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 5,000 ரூபாய்க்கும், முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 3,000 ரூபாய்க்கும் இளங்கால் கற்பூரி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை 3,500 ரூபாய்க்கும் முதிகால் கற்பூரி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை 1,250 ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று இளங்கால் வெள்ளக்கொடி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 4,000 ரூபாய்க்கும் முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 2,250 ரூபாய்க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 2,500 ரூபாய்க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை,1,000 ரூபாய்க்கும் விற்பனையானது. வெற்றிலை உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## தேயிலை தூள் ஏல விலை திடீர் சரிவால் விவசாயிகள் கவலை

ஊட்டி:நீலகிரி தேயிலை தூள் ஏல விலை, 'தடாலடி'யாக சரிந்ததால், மூலப்பொரு-ளான பசுந்தேயிலை விலையும் குறைந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் 'ஆட்டம்' கண்டுள்ளது. நீலகிரி தேயிலைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் திருப்தியாக இல்லாததால், ஏலத்தில், தேயிலை துாளின் விலையில், சரிவு தொடர்கிறது. கடந்த வாரம் ஒரு கிலோ தேயிலை துாளின் சராசரி விலை கிலோவுக்கு, 63 ரூபா-யாகமட்டுமே இருந்தது. கடந்தாண்டு, இதே கால கட்டத்தில், சராசரி ஏல விலை 85 ரூபாயாக இருந்தது.ஏல விலையின் அடிப்படையில், பெரும்பாலான தேயிலை

தொழிற்சாலைகள், தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு, 8 –- 10 ரூபாய் வரை மட்டுமே வழங்குகின்றன. இதனால், விவசாயிகள், பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர். நீலகிரி சிறு, குறு விவசாயிகள் சங்க தலைவர் சுப்ரமணியம் கூறுகையில், ''ஏலத்தில்விற்கப்படும் தேயிலை துாள் வெளி மார்க்-கெட்டிற்கு வந்து சேர்வதற்குள், இடையில் வர்த்தக முறைகேடுகள் நடக்கின்றன, என்பது நீண்ட கால குற்றச்சாட்டு.தேயிலை துாளின் ஏல விலையை காட்டிலும், 2 முதல் 10 மடங்கு வரை கூட கூடுதல் விலைக்கு தேயிலை துாளை விற்கின்றனர். தேயிலை விவசாயிகள், தொழிற்சாலை உற்பத்தியாளர்கள், தேயிலை ஏலதாரர்கள், விற்பவர்கள் என, தேயிலை தொழில் சார்ந்த அனைத்து தரப்பினரையும் கண்கா-ணித்து, வர்த்தகத்தை முறைப்படுத்துவது தேயிலை வாரியத்தின் கடமையாகும், என்றார்.

**<u>வேளாண் கூட்டுறவு வங்கியில் 50 சதவீத மானியத்தில் விதை நெல் வழங்கல்</u>**

மன்னார்குடி : திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் உள்ள லெட்சுமாங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், மானியத்தில் விதை நெல் வழங்கும் விழா நடந்தது. இதில், கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பங்கேற்று, 50 சதவீத மானியத்தில் விதை நெல் வழங்கி பேசியதாவது: வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில், தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, 44 லட்சம் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக, 94.5 லட்சங்களும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், அனைத்து வகையான சான்று பெற்ற விதைகள் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக, 20 கிலோ விதை வழங்கப்படும். மேலும் சம்பா பருவத்திற்கு, 5,639 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள்மூலமாக, 600 டன் விதைகள் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு

கூறினார்.விழாவில், கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் சங்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>சிக்கன வழியில் பூச்சி நோய் கட்டுப்பாடு விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை</u>**

கோபி: பயிர்களில் தோன்றும் பூச்சி நோய் தாக்குதலுக்கு, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலரிடம் யோசனை பெறுவது அவசியமாகும். விவசாயிகள், தாங்கள் பயிரிடும் பயிர்களான நெல், கரும்பு, நிலக்கடலை, மக்காச்சோளம், பருத்தி, தென்னை, மஞ்சள், வாழை, மரவள்ளி, காய்கறிகள் போன்ற பயிர்களில், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் காணப்பட்டால், பூச்சி மருந்து கடைகளில், மருத்துகள் வாங்கி தெளிப்பதை தவிர்க்க வேண்டும். வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்ககளை அணுகி, உரிய பரிந்துரையின் பேரில், மருந்துகள் தெளிப்பதன் வாயிலாக, அதிக மகசூல் அடைவதோடு, பூச்சி மருந்துகள் தெளிப்பதன் வாயிலாக, சரியான தீர்வு பெற்று, அதிக மகசூல் அடைவதோடு, பூச்சி மருத்துகளுக்கான செலவையும், கணிசமாக குறைக்கலாம், மேலும், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் தெளிப்பது மட்டுமல்லாது, பூச்சிநோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி வாய்ந்த ரகங்களை, சாகுபடி செய்தால், பயிர்களில் தோன்றும் பூச்சி நோய்களை சிக்கன வழியில் கட்டுப்படுத்த முடியும். விவசாயிகள், தங்கள் பயிர்களில் தோன்றும் பூச்சி நோய் தாக்குதலுக்கு, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலரிடம் பரிந்துரை பெற்று, பூச்சி மற்றம் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெறும்படி, கோபி வேளாண் துறை உதவி இயக்குனர் வாசுதேவன் கேட்டுக்கொண்டார்.

**<u>விவசாயிகளுக்கு உரப்பாசனம் பயிற்சி</u>**

மடத்துக்குளம் : மடத்துக்குளம் அருகே, நாற்றுப்பண்ணை விவசாயிகளுக்கு உரப்பாசனம் குறித்து வேளாண்மை கல்லூரி மாணவியர் பயிற்சி அளித்தனர். மடத்துக்குளம் தோட்டக்லைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: தேனி பகுதியிலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி இறுதியாண்டு மாணவியர் கிராமத்தங்கல் திட்டத்தில், மடத்துக்குளம் பகுதியில் பயிற்சி

பெறுகின்றனர். இதில் ஒரு பகுதியாக பாப்பான்குளத்தில் உள்ள நாற்றுப் பண்ணையில் பயிற்சி வழங்கப்பட்டது.இதில், பண்ணை செயல்பாடுகள், விவசாயிகளின் நிலங்களுக்கு உரப்பாசனம், அதன் பயன்கள், இந்த உரப்பாசனம் சொட்டு நீர்முறையில் நடைமுறைபடுத்துதல் குறித்தும், சொட்டு நீர் பாசன அமைப்பு மூலம் பெர்டிலைசர் இன்ஜெக்டர் அல்லது பெர்டிலைசர் டேங்க் வழியாக பயிருக்கு தேவையான தழை (என்), மணி(பி), சாம்பல்(கே) சத்துக்கள் செலுத்தும் முறையே உரப்பாசணம் என்பது குறித்தும், இதில் நீரும், உரச்சத்துக்களும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பயிரின் பகுதியை சென்றடைவது குறித்தும் மாணவியர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

**<u>மழை புண்ணியத்தால் நிரம்பிய 2,000 நீர்நிலைகள்: நீர்வள ஆதார துறை அதிகாரிகள் திருப்தி</u>**

தமிழகத்தில், பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் மழையால், மாநிலம் முழுவதும் உள்ள, 2,000க்கும் மேற்பட்ட நீர்நிலைகள் நிரம்பியுள்ளன. தமிழகத்தில், 34 ஆறுகள்; 17 ஆற்றுப் படுகைகள்; 100க்கும் மேற்பட்ட அணைகள்; 39,202 ஏரிகள்; ஆயிரக்கணக்கான குளங்கள், திறந்தவெளி கிணறுகள், குழாய் கிணறுகள் உள்ளன. மாநிலத்தின் மொத்த பாசன பரப்பு, 72 லட்சம் ஏக்கர். இதில், 18 லட்சம் ஏக்கர், கால்வாய்கள் மூலமும்; 12 லட்சம் ஏக்கர், ஏரிகள் மூலமும்; 38 லட்சம் ஏக்கர், திறந்தவெளி மற்றும் குழாய் கிணறுகள் மூலமும் பாசனவசதி பெறுகின்றன. கர்நாடகா, கேரளா மாநிலங்களில், தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால், கோவை, தேனி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, வேலூார் உள்ளிட்ட மாவட்டங்களில், நீர்வரத்து அதிகரித்துள்ளது.இங்குள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி உள்ளன. கர்நாடகாவில் திறந்து விடப்பட்ட உபரிநீர் மேட்டூர் அணையை வந்தடைந்தது. மேட்டூர் அணையில், இருந்து காவிரி டெல்டா மாவட்டங்களின், பாசனத்திற்காக, தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. இந்த நீர்வரத்து மற்றும் டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழையால், இங்குள்ள நீர்நிலைகளின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது.சென்னை, மதுரை, திருச்சி, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல

மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. இதனால், இப்பகுதிகளில், நிலத்தடி நீர்மட்டம் விரைவில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதுகுறித்து, நீர்வள ஆதாரத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:நீர்வளத் துறையில், நீராதாரங்களின் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்மட்டம் கண்காணிக்கப்படுகிறது.நிலத்தடி நீர் மட்டத்தை கண்காணிக்க, மாநிலம் முழுவதும், 3,280 திறந்த வெளி கிணறுகள்; 1559 ஆழ்துளை கிணறுகள்; கடலோர பகுதிகளில், 284 ஆய்வு கிணறுகள் உள்ளன. கடந்த சில மாதங்களாக, தமிழகத்தில், நிலத்தடி நீர் பயன்பாடு, 80 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது. தற்போதைய மழையின் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.நீராதாரங்களிலும், தண்ணீர் நிரம்பி வருகிறது. 2,000 நீர் நிலைகள் நிரம்பியுள்ளன. மழை தொடர்ந்தால், வடகிழக்கு பருவமழைக்கு முன், அனைத்து நீர்நிலைகளும் நிரம்பிவிடும் வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

**சிவகங்கை விவசாயிகள் ஆர்வம்: விரும்பும்"ஜோதி' ரக நெல் குறைந்த செலவு, தண்ணீரில், அதிக மகசூல் நம்பிக்கை**

சிவகங்கை:வேளாண்மை துறை வழங்கும், விதை நெல் ரகங்களை விட கூடுதல் மகசூல், நல்ல விலை கொடுக்கும் "ஜோதி' ரக நெல்லை நடவு செய்யவே, சிவகங்கை மாவட்ட விவசாயிகள் அதிகளவில் விரும்புவதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மாவட்டத்தில், பரவலாக அனைத்து தாலுகாவிலும் மழை பெய்தாலும் அதிகபட்சமாக காரைக்குடி, திருப்புத்தூரில் அதிகளவில் மழை பதிவாகியுள்ளது. இந்த மழையை நம்பி, பெரும்பாலானவர்கள் நேரடி விதைப்பாக நெல் விளைச்சலை மேற்கொள்ள, விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதற்காக, வேளாண்மை துறை சார்பில், கோ. ஆர்.,49 ரக விதை நெல்லை அறிமுகம் செய்துள்ளது. இந்த நெல்லை விதைப்பதின் மூலம், அதிக மகசூல் கிடைக்கும் என, விவசாயிகளுக்கு அறிவித்து வருகின்றனர். "ஜோதி'யே விருப்பம்: மாவட்ட அளவில், 80 ஆயிரம் எக்டேர் விவசாயிகள், நெல்லை மட்டுமே நடவு செய்து வருகின்றனர். இவை, கிணறு, கண்மாய் மற்றும் ஆற்றுப்பாசனத்துடன், நேரடி

நெல் விதைப்பு மூலமும் நெல்லை நடவு செய்து வருகின்றனர். தற்போது, பெய்த மழையை வைத்து, நேரடி விதைப்பில் நெல் நடவு செய்யும் பணியில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, வேளாண்மை துறை பல வகை நெல் ரகங்களை நடவு செய்ய, வலியுறுத்துகின்றனர். ஆனால், விவசாயிகள் மனதில், "ஜோதி' ரக விதை நெல் தான், அதிக மகசூலை தரும் என்ற நம்பிக்கையை பெற்றுள்ளது. இதனால், ஜோதி ரக நெல்லை நேரடி விதைப்பு மூலம், நடவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கருத்து: இது குறித்து, மாராத்தூர் விவசாயி நடராஜன் கூறியதாவது, வேளாண்மை துறை பரிந்துரைக்கும் விதை நெல்லை நடவு செய்து, பராமரித்து அறுவடை எடுப்பதற்குள் விவசாயிகள் போராட வேண்டியுள்ளது. அதே நேரம், "ஜோதி' விதை நெல்லை நடவு செய்தால், அதிக தண்ணீர் தேவைப்படாது. பராமரிப்பு செலவு மிக குறைவு. பூச்சி தாக்குதல் அதிகம் இருக்காது. நெல் கதிர் சாயாமல் அப்படியே நிற்பதால், நெல் சேதம் குறையும். கேரளாவில், இந்த நெல்லிற்கு அதிக வரவேற்பு இருக்கிறது. இதனால், கேரளா மாநில அரிசி வியாபாரிகள், இந்த நெல்லை கூடுதல் விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். இதன் காரணமாக, விவசாயிகள் அதிகளவில் "ஜோதி' ரக நெல்லை நடவு செய்யவே விரும்புகின்றனர், என்றார்.விருப்பம்: மாவட்ட நிர்வாகம், விவசாயிகள் விரும்பும் விதை நெல் ரகங்களை வழங்கி, அதிக மகசூல் பெற்று, விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என, விவசாயிகள் விரும்புகின்றனர்.

## <u>நெல் விவசாயம்: பழங்குடியின மக்கள் ஆர்வம்</u>

பந்தலூர்: நீலகிரி மாவட்ட எல்லையில், நெல் விவசாயத்தில், பழங்குடியின மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நெல் ஏற்றுமதி : நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் பகுதிகளில், தேயிலை, காபி விவசாயம் மேற்கொள்ளும் மலைப்பகுதிகள் மட்டுமின்றி, வயல்வெளிகளும் அதிகளவில் உள்ளன. இப்பகுதிகளில், கடந்த காலங்களில் நெல் விவசாயம் அதிகரித்திருந்ததுடன், கேரளா மாநிலத்திற்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், நெல் ஏற்றுமதியும் செய்யப்பட்டது.

ஆனால், காலநிலை மாற்றம், பணியாட்கள் குறைவு உள்ளிட்ட காரணங்களால், நெல் விவசாயம் படிப்படியாக நிறுத்தப்பட்டு, வயல்பகுதிகளும் தேயிலைத்

தோட்டங்களாக மாற்றம் பெற்றது. மேலும், வயல்வெளிகளில், நேந்திரன் வாழை விவசாயமும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், மாநில எல்லைப் பகுதியான எருமாடு பகுதியில், தற்போதும் பழமை மறவாத வகையில், நெல் விவசாயத்தில், பழங்குடியின மக்கள் ஈடுபட்டுள்ளனர். நான்கு மாதங்களில் அறுவடை செய்யப்படும், ஆதிரா, தைசிங்கன், ஜீரகசாலா வகை நெல் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. கூடலூர் பகுதியில்...: இதுகுறித்து, விவசாயி நீலகண்டன் கூறுகையில், "தற்போது மழை துவங்கியுள்ள நிலையில், நான்கு மாத காலத்தில் அறுவடை செய்யும் நெல் மட்டும், ஒரு போக விவசாயமாக மேற்கொள்ளப்படுகிறது. தோட்டக்கலைத் துறையினர் கூடலூர் பகுதியில் மட்டுமின்றி, எங்களை போன்ற நெல் விவசாயத்தில் ஆர்வம் காட்டும் மாநில எல்லைப்பகுதி விவசாயிகள் மத்தியிலும், நெல் விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்," என்றார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**<u>சேவூரில் விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி</u>**

ஆரணியை அடுத்த சேவூர் ஊராட்சியில் விவசாயி ஏழு மலை என்பவரின் வயல்வெளி யில் வேளாண்மை தொழில் நுட்பம், வேளாண்மை முகமை திட்டத்தின்கீழ் விவசாயிக ளுக்கு பண்ணை பள்ளி, நேரடி நெல் விதைப்பு தொழில் நுட் பம் குறித்தும், நெல் விதைப்பு சம்மந்தமாக சாகுபடி குறித் தும், ஆள் பற்றாக்குறையை சமாளிப்பது குறித்தும், சாகு படியின் போது செலவினம் குறைக்கும் வகையில் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி யினை வேளாண்மை உதவி இயக்குனர் வே.சத்தியமூர்த்தி, அன்னை தெரசா தொண்டு நிறுவன அலுவலர் பலராமன், விவசாயிகள் பவித்ரகுமார்,

உதயகுமார், கிருஷ்ணராஜ் உள்பட 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் சரிவு 290 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 300 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 290 காசுகளாக சரிவடைந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–335, ஐதராபாத்–273, விஜயவாடா, தனுகு–295, பார்வாலா–280, மும்பை–328, மைசூர்–325, பெங்களூர்–320, கொல்கத்தா–342, டெல்லி–315. கறிக்கோழி கிலோ ரூ.75–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.55–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

தினகரன்

## தரமான விதைகள் விற்பனை செய்வதை வேளாண்துறை உறுதிபடுத்த விவசாயிகள் வலியுறுத்தல்

ஈரோடு, : தரமான விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, மேட்டூர் மேற்கு

கரை வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால், காலிங்கராயன்வாய்க்கால் உள்ளிட்ட பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் பாசன பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு வழக்கத்தை விட கூடுதலாக 40 சதவீதம் அளவுக்கு நெல்சாகுபடி நடக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில், போலி விதைகள் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். ஆனால் இதை தடுக்க வேளாண்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். போலி விதைகளால் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது. போலி விதைகளின் புழக்கம் அதிக அளவில் உள்ளதால் விவசாயிகள் கடைகளில் விதைகள் பெறுவதற்கே அச்சப்படும் நிலை இருந்து வருகின்றது. இதே போல போலி மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக களைகொல்லி மருந்துகளில் போலி அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருவதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இது குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட அமைப்பு செயலாளர் லோகுசாமி கூறுகையில், ‘‘மாவட்டத்தில் போலி விதைகளும், மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது குறித்து பல முறை புகார் அளித்தும் வேளாண்துறையினர் மவுனம் காத்து வருகின்றனர். போலி விதைகளால் பாதிக்கப்படுவது விவசாயிகள் மட்டுமே. தற்போதைய நிலையில் விவசாயம் செய்வது என்பதே அரிதாக உள்ளநிலையில் போலி விதைகளால் விவசாயிகள் பெரிய அளவில் நஷ்டத்தை சந்திக்க வேண்டி உள்ளது. எனவே மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதியளிக்க வேண்டும்.

மேலும் பராம்பரிய நெல் ரகங்களை பயிரிட ஊக்குவிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் 200 ஏக்கரில் காஞ்சிக்கோவில் பகுதியில் மட்டும் பயிரிட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்,'' என்றார்.

**<u>விவசாய நீர்ப்பாசனம் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார் நிறுவும் பணி ரூ.2.37 கோடி மானியம் 69 விவசாயிகள் பயன்</u>**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு சூரிய ஒளி மின்சக்தியினை விவசாய நீர்பாசனத்திற்கு உபயோகிக்க வேளாண் பொறியியல் துறை மூலம் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. ரூ.2.37 கோடி மானியத்தில் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் புதுகை ஒன்றி யம், வடவாளம், ராயப்பட்டி கிராமத்தில் முதன்முதலாக சதாசிவம் என்ற விவசாயியின் தோட்டத்தில் சூரிய ஒளி மின்சக்தி வாயிலாக இயங்கும் பம்ப்செட் நிறுவப்பட்டுள் ளது. இதனை கலெக்டர் மனோகரன், வேளாண் பொறியியல் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து கூறியதாவது: மின்பற்றாக்குறையை சரிக்கட்டும் விதமாக இத்திட்டம் அமைந்துள்ள தாலும், காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையில் கிடைக்கும் சூரிய வெப் பத்தை கொண்டு இந்த மோட்டார் இயங்குவதா லும், தடை யில்லா விவசாயத்திற்கு பாசனநீர் கிடைப் பது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மும்முனை மின் சாரம் இல்லாத நிலையிலும், சூரிய ஒளி மின்மோட்டார்கள் மூலம் பாசனம் செய்யும் வாய்ப்பு உள்ள தால் விவசாயிகள் கவலையின்றி விவசாயம் செய்ய முடியும் என்றார். பயனாளி சதாசிவம் கூறுகையில், இத்திட்டம் எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இத்திட்டத்திற்காகவே, புதியதாக போர் போட்டு, பைப் இறக்கி இவ்வமைப்பு எனது நிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. மின்சாரத்தைப்பற்றி

சிறிதும் கவலையின்றி வெயிலைப் பொறுத்து தொடர்ச்சியாக நீர் இறைக்கலாம். பம்பு மூலம் நீர் வெளியேறும் அளவு மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. இதுவரை நெல் மட்டுமே சாகுபடி செய்து வந்தேன். வருங்காலங்களில் கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்களும் காய்கறிகள் மற்றும் மலர்கள் ஆகியவைகளை யும் பயி ரிட்டு, அதிக அளவில் மகசூல் ஈட்டுவேன் என்றார். புதுகை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அறிவழகன் கூறியதாவது:சோலார் பம்புசெட் 4.800 வாட்ஸ் திறனுடைய சூரிய தகடுகளான அடுக்குகள் மற்றும் அதனை தாங்கி நிற்கும் அமைப்பு, பம்பு செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் கருவி, இன்வெர்டர், 5 எச்பி ஏசி பம்பு (10 ஸ்டேஜஸ்) ஆகியவை களைக் கொண்டது. இத்திட்டத்தின் குறிக்கோள் விவசாயிகளின் நீர்ப்பாசன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மரபுசாரா எரிசக்தியில் இயங்கக்கூடிய பாசன வசதியினை ஏற்படுத்தித் தருதல் மற்றும் மின்சாரத்தை எதிர்நோக்கி இல்லாமலும், பிற எரிபொருள் (டீசல்) செலவின்றியும், இயற்கையாக செலவின்றி கிடைக்கும் சூரிய சக்தி யினை விவசாய நீர்பாசனத்திற்கு உபயோகிக்க வழிவகை செய்தலும் ஆகும். இத்திட்டம் வேளாண்மைக்குப் பெரிதும் உதவக்கூடியதாகவும், பாரம்பரிய எரிசக்தி பயன்பாட்டிற்கு மாற்றாகவும் விளங்குகிறது. பகலில் தொடர்ந்து தடை யற்ற பாசனத்திற்கும் தொடர் செலவினம் இல்லா மல் நீடித்து உழைக்கும் அமைப்பாகவும் உள்ளது. 2012-13, 2013-14ம் ஆண்டுக்கான திட்டங்களின் கீழ் ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்த வெளி கிணறு நீரினை இறைப்பதற்கு 5 எச்பி திறன் கொண்ட ஏசி நீர் மூழ்கி பம்புகள் 69 எண்கள் புதுகை மாவட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது திறந்த வெளிக்கிணறுகளுக்கு மட்டும் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார்கள் நிறுவிட விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து வரவேற்கப்படுகிறது. இதில் ஆழ்குழாய் கிணறு 5எச்பி ஏசி நீர்மூழ்கி சோலார் பம்பு மொத்த விலை ரூ. 4,39,950, அரசு மானியம் 80 சதவீதம், ரூ 3,35,200, மானியமாக கிடைக்கும். விவசாயிகளின் பங்களிப்பாக 20 சதவீதம்

ரூ. 1,04,750 கட்ட வேண்டும். இதேபோல் திறந்த வெளி கிணறு 5 எச்பி ஏசி நீர்மூழ்கி சோலார் பம்பு மொத்த விலை ரூ.5,01,512 அரசு மானியம் ரூ.3 லட்சத்து 84 ஆயிரம், விவசாயிகளின் பங்களிப்பு ரூ.1,17,512. இத்திட்டம் புதுகை மாவட்டத்தில் 69 விவசாயிகளுக்கு ரூ.2 கோடியே 37லட்சத்து 68 ஆயிரம் மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார். ஆய்வின்போது, எம்எல்ஏ கார்த்திக் தொண்டைமான், உதவி செயற்பொறியாளர் சிதம்பரம், இளநிலைப் பொறியாளர் அன்புநாதன் மற்றும் பொறியாளர்கள் உள்பட பலர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு பாராட்டு**

சுற்றுச்சூழல் நலனுக்கேற்ற, பராமரிப்பு இயக்குதலுக்கு எளிதான நீண்ட நாள் செயல்பாடு திறனுடைய சூரிய ஒளி மின்மோட்டார்களை வேளாண் பொறியியல் துறை மூலம் அரசு மானியத்தில் நிறுவி பயனடைந்த மாவட்ட விவசாயிகளை கலெக்டர் மனோகரன் பாராட்டினார். எரிபொருள் சிக்கனம்

தொலை தூரப் பகுதிகளுக்கும், மின் இணைப்பு தற்பொழுது வழங்க இயலாத பகுதிகளுக்கும் இந்த அமைப்பை ஏற்படுத்தி கொடுக்க முடிகிறது. மின் சேமிப்பு மற்றும் எரிபொருள் சிக்கனத்திற்கு உதவிபுரிகிறது.

## தரமான விதைகள் விற்பனை? வேளாண்துறை உறுதிபடுத்த விவசாயிகள் வலியுறுத்தல்

ஈரோடு, : தரமான விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, மேட்டூர் மேற்கு கரை வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால், காலிங்கராயன்வாய்க்கால் உள்ளிட்ட பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் பாசன பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு வழக்கத்தை விட கூடுதலாக 40

சதவீதம் அளவுக்கு நெல்சாகுபடி நடக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில், போலி விதைகள் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். ஆனால் இதை தடுக்க வேளாண்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். போலி விதைகளால் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது. போலி விதைகளின் புழக்கம் அதிக அளவில் உள்ளதால் விவசாயிகள் கடைகளில் விதைகள் பெறுவதற்கே அச்சப்படும் நிலை இருந்து வருகின்றது. இதே போல போலி மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக களைகொல்லி மருந்துகளில் போலி அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருவதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இது குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட அமைப்பு செயலாளர் லோகுசாமி கூறுகையில், ''மாவட்டத்தில் போலி விதைகளும், மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது குறித்து பல முறை புகார் அளித்தும் வேளாண்துறையினர் மவுனம் காத்து வருகின்றனர். போலி விதைகளால் பாதிக்கப்படுவது விவசாயிகள் மட்டுமே. தற்போதைய நிலையில் விவசாயம் செய்வது என்பதே அரிதாக உள்ளநிலையில் போலி விதைகளால் விவசாயிகள் பெரிய அளவில் நஷ்டத்தை சந்திக்க வேண்டி உள்ளது. எனவே மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதியளிக்க வேண்டும். மேலும் பராம்பரிய நெல் ரகங்களை பயிரிட ஊக்குவிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் 200 ஏக்கரில் காஞ்சிக்கோவில் பகுதியில் மட்டும் பயிரிட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்த

வேண்டும்,''என்றார்.

**<u>பெரிய வெங்காயம் சாகுபடிக்கு ரூ.12 ஆயிரம் மானியம்</u>**

உடுமலை,: பெரிய வெங்காயம் சாகுபடிக்கு ஹெக்டருக்கு ரூ.12 ஆயிரம் மானியம் வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன் விடுத்துள்ள அறிக்கையில், உடுமலை வட்டாரத்தில் பெரிய வெங்காயம் சாகுபடியை அதிகரிக்க நடப்பு ஆண்டுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டருக்கு ஆகும் சாகுபடி செலவான ரூ. 12 ஆயிரத்தை மானியமாக தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்படுகிறது. எங்கெல்லாம் சின்ன வெங்காயம் விளைகிறதோ அங்கெல்லாம் பெரிய வெங்காயம், வெள்ளை வெங்காயம் ஆகியவற்றை பயிரிடலாம். பெரிய வெங்காய சாகுபடியில் ஊடுபயிராக வெண்டை, முள்ளங்கி, கீரை வகைகளை பயிரிட்டு கூடுதல் வருமானம் பெறலாம். பெரிய வெங்காயம் ஹெக்டேருக்கு 16 டன் வரை மகசூல் கிடைக்கும். உடுமலையில் பெரிய வெங்காயம் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பெரிய வெங்காயத்தில் ஊடுபயிர் சாகுபடி மூலம் பலவித பூச்சிகள் பெருகாமல் தடுக்கலாம். காய்கறி உற்பத்திக்கு தற்போது ஒருங்கிணைந்த உர உபயோகம் மான்யமாக ரூ.1200 வழங்கி அதற்கு இடுபொருளான பாஸ்பேட் பாக்ட்ரீயா, அசோஸ்பைரில்லம் வழங்கப்படும். விவசாயிகள் குழுக்களாக பதிவு செய்தால் அநேக சலுகைகளோடு காய்கறிகளை கூடுதல் விலைக்கு விற்கலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை விவசாயிகள் கடும் அதிருப்தி</u>**

காட்டுமன்னார்கோவில், : விவசாயத்துக்கு தண்ணீர் திறக்காமல் இருக்கும் மாவட்ட நிர்வாகம் மீது விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர். காட்டுமன்னார்கோவில் வீராணம் ஏரியின் மொத்த கொள்ளளவு 47.50 அடியாகும்.

ஏரியில் உள்ள 34 பாசன மதகுகள் மூலம் 44 ஆயிரத்து 856 ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெறுகின்றன. ஏரிக்கு கீழணையிலிருந்து வடவாறு வழியாக தண்ணீர் வருகிறது. ஆண்டுதோறும் விவசாயிகள், கீழணையிலிருந்து ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, ஏரியில் தண்ணீர் தேங்கிய உடன் பாசனத்திற்கு திறப்பது வழக்கம். இந்த ஆண்டு கீழணை திறந்து வடவாறு வழியாக ஏரிக்கு தண்ணீர் குறைந்த அளவே அனுப்பப்பட்டு வருகிறது. ஏரியின் நீர்மட்டம் குறைந்த அளவே உயர்ந்து வருகிறது. இந்நிலையில் கீழணைக்கு கல்லணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றில் வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கீழணைக்கு நேற்று முன்தினம் வந்தது. இதனால் கீழணையின் மொத்த கொள்ளளவான 9 அடியில் 6 அடி தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. வீராணம் ஏரிக்கு குறைந்த அளவே தண்ணீர் வந்ததால் சென்னைக்கு குடிநீர் அனுப்பும் தனியார் ஒப்பந்தக்காரர்கள் கீழணையில் வந்து பார்வையிட்டு வடவாற்றில் அதிக அளவு தண்ணீர் திறக்க வேண்டுமென வலியுறுத்தினர். இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 500 கன அடி வீதம் தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் வீராணம் ஏரிக்கு வடவாறு வழியாக வரும் போது வடவாற்றில் உள்ள பாசன வாய்க்கால்களில் சிலவற்றில் வீணாக தண்ணீர் செல்கிறது. இதன் காரணமாக ஏரிக்கு 640 கன அடி வீதம் மட்டுமே தண்ணீர் வருகிறது. இதனால் ஏரியின் நீர்மட்டம் 42.25 அடியாக உள்ளது. வீராணம் ஏரியின் கீழ் கரையில் விவசாய பணிகள் தொடங்கியுள்ள நிலையில் விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். தண்ணீர் திறக்க வேண்டுமென லால்பேட்டை பொதுப்பணித் துறை அலுவலகத்தில் உள்ள அலுவலர்களிடம் கோரிக்கை வைத்தனர். தண்ணீர் திறக் காத காரணத்தினால் இரவு நேரங்களில் மதகுகளை திறக்க விவசாயிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதை அறிந்த பொதுப் பணித்துறையினர் கண்காணிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து தண்ணீர் திறக்காமல் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருக்கும் மாவட்ட நிர்வாகம் மீது விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**<u>கால்நடைகளுக்கு கோமாரி நோய்:செப்.1 முதல் தடுப்பூசி முகாம்</u>**

கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம், செப்டம்பர் 1 முதல் 21 ஆம் தேதி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளது: கலப்பின மாடுகளை அதிகம் தாக்கும் கால் மற்றும் வாய் கோமாரி நோயினால், கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார மற்றும் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. இந்த நோயினால் கால்நடைகளுக்கு உயிரிழப்பு ஏற்படுவது குறைவாக இருந்தபோதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி மற்றும் சினைபிடிப்புத் திறன், எருதுகளின் வேலைத் திறன் பாதிக்கப்படுகிறது. குளிர் மற்றும் பனி காலங்களில் அதிகமாகப் பரவும் இந்நோயினை முழுமையாகக் கட்டுப்படுத்தும் வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் செப்டம்பர் 1 முதல் 21 ஆம் தேதி வரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

முகாம் நடைபெறும் கிராமங்கள் குறித்து, அந்தந்தப் பகுதி கால்நடை மருந்தகத்தின் மூலம் முன்னறிவிப்பு வெளியிடப்படும். இந்த வாய்ப்பினை, விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**<u>விதைப் பண்ணையில் ஆய்வு</u>**

நிலக்கடலை மற்றும் பருத்தி விதைப் பண்ணைகளில், வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். தரமான விதைகளை உற்பத்தி செய்து வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில், மாவட்டம் முழுவதும் பல்வேறு பயிர்களுக்கான விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதார நிலை விதைகளைப் பயன்படுத்தி, அனைத்து தொழில்நுட்பங்களின் உதவியுடன் தரமான

சான்று விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலையில், செம்பட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை (ஜெஎல்-24) விதைப் பண்ணையை, விதைச் சான்று உதவி இயக்குநர் பெ. விஜயராணி ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, பழனி கவாலபட்டியில் உள்ள பருத்தி (அம்பார) விதைப் பண்ணையும் ஆய்வு செய்யப்பட்டது. பின்னர், புளியம்பட்டியில் செயல்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் களவிதை மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, விதைச் சான்று அலுவலர்கள் திருமலைசாமி, சின்னசாமி, ஜெயசந்திரன், பனிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம்

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாள்கள், ஆடுகளுக்கான குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடைபெறுகிறது. அனைத்து கால்நடை மருத்துவமனை மற்றும் உதவி மருத்துவமனைகளில் நடைபெறும் இந்த முகாமுக்கு, அரசு விலையில்லா ஆடுகள் பெற்ற பயனாளிகள் மற்றும் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது ஆடுகளை கொண்டுவந்து, குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம் என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி அறிவித்துள்ளார்.

## சிறுதானிய பயிர் இடுபொருள்கள் விநியோகம்

சிங்கம்புணரி அருகே எஸ். புதூர் ஒன்றியம் மேலவண்ணாயிருப்பில் மாநில சமவளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானிய பயிர்களுக்கான இடுபொருள்கள் விநியோக விழா நடைபெற்றது. விழாவுக்கு மேலவண்ணாயிருப்பு ஊராட்சி மன்றத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அழகப்பன் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் உழவர்களுக்கு சிறு தானியம் மற்றும் தீவனப் பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துக் கூறி இடுபொருள்கள் வழங்கப்பட்டன. மேலும் இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் வேளாண்மை அலுவலர் செல்லதுரை மற்றும் எஸ். புதூர் வட்டார வேளாண் அலுவலர்கள் கலந்து

கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தீவனப் புல் மற்றும் தீவன சோளம் ஆகியவை வழங்கப்பட்டன.